**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No. 59/2025**
**LW-1 Examined as PW-1**

| | |
|---|---|
| Name: கோகுலகிருஷ்ணன் | Age: |
| Father's Name: பொன்னுரங்கம்<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Junior Assistant and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 25.05.2026 | |

**25.05.2026**

எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் படி மனுதாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**விசாரணை தொடங்கிய நேரம் 1.30 PM**

**அ.சா.1. – முதல் விசாரணை**

நான் ஒரகடத்தில் உள்ள தனியார் கம்பெனியில் கிரைன் ஆப்ரோட்டராக வேலை செய்துவருகிறேன். இந்த வழக்கு சம்பவ விபத்தில் இறந்துபோனவர் என்னுடன் மேற்படி கம்பெனியில் வேலை பார்த்துவந்த வீரமுத்து ஆவார். கடந்த 06.12.2022 ம் தேதி நான் வேலை செய்யும் கம்பனிக்கு சொந்தமான TN 12 U 1287 என்ற ஹோண்டா சைன் என்ற இருசக்கர வாகனத்தில் நான் ஓட்ட பின்னால் மேற்படி வீரமுத்து அமர்ந்து ஒரகடத்தில் இருந்து மதுராந்தகத்திற்கு சென்றுக்கொண்டு இருந்தபோது செங்கல்பட்டு பைபாஸ் செல்லும் சாலை அருகே செங்கல் சூளைகள் அமைந்திருக்கும் இடம் அருகே நெடுஞ்சாலையில் சென்றுக்கொண்டு இருந்தபோது மாலை சுமார் 5.50 மணிக்கு எதிர் திசையில் கட்டுப்பாடு அற்று வந்த ஸ்கூட்டி வாகனம் எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தில் எனக்கு லேசான காயம் ஏற்பட்டது. வீரமுத்துவிற்கு பின்னந்தலையில் காயம் ஏற்பட்ட ரத்தம் வந்தது. செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு நாங்கள் இருவரும் 108

ஆம்புலன்ஸ் மூலம் சென்று சிகிச்சை பெற்றோம். மறுநாள் காலையில் நான் சாலவாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். 08.12.2022 ம் தேதி மேற்படி வீரமுத்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி எனது வாகனத்தின் மீது மோதிய ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டிவந்த நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க அ.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 1.35 PM**

Nature of witness: Complainant witness

**Sd/R. கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**